**கவனிக்க.**- *2024.10.11 ஆந் திகதிய 2406 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2407 - 2024 ඔක්තෝබර් මස 18 වැනි සිකුරාදා - 2024.10.18

*2407 ஆம் இலக்கம் – 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1996 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2005 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1993-B 82619-5,441 (2024/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அமைச்சின் கீழுள்ள நில அளவைத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறைச் சேவை வகுதியின் தரம் III இற்கான சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

*நில அளவைகள் திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறை சேவை வகுதியின் தரம் III இற்கான சட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து அரசாங்க ஆணைக்குழுவின் கட்டளைக்கமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*01.* **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

*அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் இருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை சபை ஒன்றினால் நடாத்தப்படும் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற போட்டியாளர் வெற்றிடத்திற்காக இணைத்துக் கொள்ளப்படுவார்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் செயலாற்றுகை நடைமுறைக்கு ஒத்தியங்கும் வகையில் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.*

*நியமனம் அமுல்படுத்தும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.*

*02.* **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி /தொழில் தகைமைகள்**

*இலங்கை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.*

(ii) **அனுபவம்**

*உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் சட்டத்தரணியாக மூன்று (03) வருடங்களுக்கும் குறையாத செயலூக்க தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல். (செயலூக்க தொழில் அனுபவத்தை உறுதி செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில், அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட காலம், சான்றுப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)*

*அல்லது*

*உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அரச நிறுவனம் ஒன்றில் சட்ட ரீதியான பதவி ஒன்றில் *மூன்று (03) வருடங்களுக்கும் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.*

*(செயலாளர் / திணைக்கள/ நிறுவனத் தலைவரினால் வெளியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)*

**குறிப்பு:**

*அடிப்படைத் தகைமைகள் உறுதி செய்கின்ற ஆவணங்களில் விண்ணப்பதாரியினாலேயே சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பப்படிவத்திற்கு இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும். சேவைக் காலம் தொடங்குகின்ற மற்றும் முடிவடைகின்ற திகதிகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இணைக்கப்பட்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்பட முடியும்.*

- *சட்டவியல் பட்டப்படிப்பு அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் சட்ட ரீதியான பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அடிப்படைத் தகுதியாகும்.*

(iii) **உடற்தகைமைகள்**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கை நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும் பதவிக்குரிய கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **ஏனையவை**

- இலங்கைப் பிரசையாக இருத்தல்.
- விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல்.
- பதவிக்குரிய வகையில் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

i. இப்பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியம் உடையதும் ஆகும். உமக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுபடுதல் வேண்டும். நீங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/விதவைகள், தபுதாரர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற விதமாக உம்மால் அதற்காக பணப் பங்களிப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

ii. இந்நியமனமானது 03 வருடகால தகுதிகாண் நிலையைக் கொண்டதாகும். பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 03 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆந் திகதிய மற்றும் 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைக்கமைய உரிய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

iv. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும், நில அளவைத் திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதி (சட்ட உத்தியோகத்தர்) இற்காக ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறைக் கொள்கைகளின் ஏற்பாடுகளுக்கும், திணைக்களம் சார்ந்த ஏனைய கட்டளைகளுக்கும் மேற்படி நியமனம் கட்டுப்படும்.

v. விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், மேலும், நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதி பெற்ற மொழி மூலமாக, நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலமே கருத்தில் கொள்ளப்படும்.

04. **வயதெல்லை:**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதுடன், 45 வயதைத் தாண்டாமல் இருத்தல்.

05. **சம்பள அளவுத் திட்டம்:**

இப்பதவிக்கு 2016.02.25 ஆம் திகதிய மற்றும் 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சம்பள சுற்றறிக்கை 1 ஆம் அட்டவணைக்கு அமைய, ரூபா 47,615.00 - 10×1,335 - 8 × 1,630-17 ×2,170 - ரூபா 110,895.00 (SL-1-2016) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப் பெறும்.

06. கீழே குறிப்பிடப்பட்டு உள்ள புள்ளி வழங்கும் நடைமுறை ஒழுங்குவிதியின் அடிப்படையில் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொண்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்புப் பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொண்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொண்ட பட்டப் பின்படிப்பு சட்ட டிப்ளோமா | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொண்ட, | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடன் கூடிய சட்டவியல் பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு மேல் தர சித்தியுடன் கூடிய சட்டவியல் பட்டம் | 10 | |
| | • வகுப்புத் தர சித்தியுடன் கூடிய சட்டவியல் பட்டம் | 07 | |
| | • பொதுத் தர சித்தியுடன் கூடிய சட்டவியல் பட்டம் | 05 | |
| | (ஈ) சட்டக் கல்லூரி இறுதியாண்டில் முதலாம் வகுப்புச் சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டில் இரண்டாம் வகுப்புச் சித்தி | 05 | |
| | **குறிப்பு 1 :** சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சையில் கௌரவ சித்தியுடன் சித்தியடைந்து இருந்தால் மாத்திரம் மேற்குறிப்பிட்ட 05 புள்ளிகள் வழங்கப்படும். | | |
| | ( உயர் தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 02 | **மேலதிக அனுபவம்**<br>வழக்குகளுக்குரிய ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் வாதிடுதல் | | 35 |

| | வழக்குத் தாக்கல் செய்தலுக்கான புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு) | நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிடுதல் தொடர்பில் புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு) |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 2 | 5 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2 | 4 |
| மேல் நீதிமன்றம் | 2 | 3 |
| மாவட்ட நீதிமன்றம் | 4 | 5 |
| நியாய சபை | 2 | 3 |

**குறிப்பு –** மேற்குறிப்பிட்ட தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய வழக்குத் தீர்ப்புகளின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு இடம்பெற்ற திகதியின் வழக்கு அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை நேர்முகப் பரீட்சை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழிநுட்பம் /தகவல் தொழிநுட்பச் சட்டம் தொடர்பான அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பில் தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தை பிரதான பாடமாக கற்றிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான டிப்ளோமா | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் தொடர்பான டிப்ளோமா அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் தொடர்பான NVQ -5 அல்லது அதனை விட உயர் மட்ட டிப்ளோமா | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத் துறையில் பாடநெறியைக் கற்று/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டு பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள். (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்ச இரு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்)<br>(அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| 04 | **மொழித் தேர்ச்சி** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பில் ஆங்கில மொழியைப் பிரதான படமாகக் கற்றிருத்தல் | 15 | |
| | (ஆ) ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் ஒத்திகை வாதாடு மன்றப் போட்டிகளில் (Moon Court Competition) காண்பித்துள்ள ஆங்கிலப் புலமை<br>**தனியுறுப்பினர்**<br>முதலாம் இடம்/சிறப்புத் திறமை - 12<br>இரண்டாம் இடம் - 10<br>மூன்றாம் இடம்/பிற திறமைகள் - 08<br>**குழு**<br>முதலாம் இடம்/சிறப்புத் திறமை - 10<br>இரண்டாம் இடம் - 08<br>மூன்றாம் இடம்/பிற திறமைகள் - 06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொண்ட டிப்ளோமா அல்லது பிற நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொண்ட SLQF - 3 அல்லது அதனை விட உயர் மட்ட டிப்ளோமாஅல்லது அரச பயிற்சி நிறுவனத்தில்/அரச பயிற்சி நிறுவனத்தின் அனுசரனையுடன் இயங்கும் நிறுவனத்தில் குறைந்த பட்சம் 1500 மணித்தியால பயிற்சி நெறியைத் கொண்ட ஆங்கில மொழி டிப்ளோமா | 10 | |

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | (ஈ) கல்விப் பொதுத்தராதர (உயர் தரப்) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு குறைந்தபட்சம் விசேட சித்தபெற்றிருத்தல் அல்லது IELTS மொத்த புள்ளி 6.5 அல்லது அதனை விட அதிகமாக, TOEFL – IBT 79 அல்லது அதனை விட அதிகமாக, TOEFL – CBT 213 அல்லது அதனை விட அதிகமாக, TOEFL – PBT 550 அல்லது அதனை விட அதிகமாக இருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொண்ட உயர் சான்றிதழ் அல்லது பிற நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொண்ட SLQF -2 மட்டத்திலான சான்றிதழ் ஒன்று.<br><br>(அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | 05 | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படுகின்ற திறமை**<br>பதவியின் வகிபாகத்தை நிறைவேற்றுவதற்கு தகுதியான விண்ணப்பதாரியின்<br>○ பலங்கள் (Strength Questions)<br>○ சந்தர்ப்பத்திற்கு ஏற்றவிதமாக தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் (Situational Questions) மற்றும்<br>○ திறமைகள் (Competency Questions)<br>மதிப்பிடுதலை நோக்காகக் கொண்ட வினாக்களுக்கு வழங்கப்படுகின்ற பதில் களுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும். | <br><br>02<br>03<br><br>10 | 15 |
| | **மொத்தம்** | | **100** |

07. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:**

i. தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து உள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் ஆகும்.

ii. நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரிய வகையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் என்பனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. நேர்முகப் பரீட்சையின் போது தனது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை
(2) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

08. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்:**

(i) விண்ணப்பப்படிவங்களை 2024.11.17ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "நில அளவையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களம், இலக்கம் 150, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05" எனும் முகவரிக்குக் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் காண்பிக்கப் பட்டு உள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களுடைய விண்ணப்பப்படிவத்தினை A4 தாளில் தயாரித்து முதல் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 04 வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 05 தொடக்கம் 07 வரையும் 03 ஆம் பக்கத்தில் 08 இல் இருந்து 09 வரையும் கீழ்க் காணப்படும் விதமாக தயாரித்து, அதற்கு உரிய தகவல்களை தனது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தினை உள்ளே இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு/ முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது 47,615.00 ரூபா அல்லது அதனை விடக் கூடிய மாதாந்த சம்பளத்தைப் பெறக் கூடிய அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) தற்பொழுது அரசாங்க சேவையில் அல்லது அல்லது மாகாண அரசாங்க சேவையில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தான் கடமை புரியும் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டு உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரியுடன் ஒத்தியங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

09. **பிழையான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புச் செய்யும் முன் அறிய வந்தால் தங்களது பரீட்சார்த்தத் தன்மை இரத்து செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல் ஒன்று தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்ததன் பின்னர் அறிய வருமாயின் அதற்கு உரிய நடைமுறைகளின் கீழ் சேவையில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களை நிரப்பாது விடுவதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்தானது.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் சொற்களுக்கிடையே ஏதேனும் இணங்காமை காணப்படின் அல்லது வேறுபாடுகள் இருப்பின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியின் சொற்றொடர்களே செல்லுபடியாகும்.

12. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிராத விடயம் தொடர்பாக அல்லது இவ் ஆட்சேர்ப்பு செயல்முறைகளில் ஏதேனும் சிக்கலான நிலைமை ஏற்படின் அது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுந் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம்,
மீன்பிடி மற்றும் நீர் வளங்கள்அமைச்சு.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அமைச்சு,
2024, ஒற்றோபர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அமைச்சின் கீழுள்ள நில அளவைத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறைச் சேவை வகுதியின் தரம் III இற்கான சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024**

(அலுவலகப் உபயோகத்துக்கு மாத்திரம்)

(விண்ணப்பிக்கும் மொழிக்குரிய இலக்கத்தினை கூட்னுள் எழுதுக)

சிங்களம் - 2/ தமிழ் - 3/ ஆங்கிலம் - 4

குறிப்பு– விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை மாற்றம் செய்ய முடியாது.

---

1.0 1.1 முழுப் பெயர் (திரு. / திருமதி / செல்வி) : ..........
(சிங்களத்தில் / தமிழில்) : ..........

1.2 முழுப் பெயர் : ..........
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..........

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு. / திருமதி/ செல்வி): ..........
(சிங்களத்தில் / தமிழில்)
உதாரணம்: எம். ஜீ. பீ. எஸ். கே. குணவர்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
உதாரணம் : GUNAWARDHANA, M.G.B.S.K.

2.0 2.1 நிரந்தர முகவரி : ..........
(சிங்களத்தில் / தமிழில்)

2.2 நிரந்தர முகவரி : ..........
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

3.0 3.1 பால் : பெண்/ஆண் : ஆண் 0
பெண் 1 (உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர்:
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் -2 (உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

3.3 பிறந்த திகதி: ஆண்டு : மாதம் : திகதி :

3.4 2024.11.17 ஆந் திகதியன்று வயது: வருடங்கள் : மாதங்கள்: நாட்கள் :

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

4.0 4.1 தொலைபேசி இலக்கம்: நிரந்தர : | | | | | | | | | | |

கையடக்க : | | | | | | | | | | |

5.0

5.1 நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பங்களைக் கோரும்அறிவித்தலுக்குகமைய பெற்றுக் கொண்டுள்ள தகைமைகள் தொடர்பான விபரங்கள்

| தகைமையைப் பெற்றுக் கொண்ட நிறுவனம் | பெற்றுக் கொண்ட திகதி |
|---|---|
| .................................................................... | ........................................... |
| .................................................................... | ........................................... |

உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :..............................

*அடிப்படைத் தகைமைகளை உறுதி செய்கின்ற சான்றிதழ்கள்/ ஆவணங்கள் உண்மையானவை என விண்ணப்பதாரியினாலேயே உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரிய அறிவித்தலில் 06 ஆம் இலக்கத்தின் கீழ் ஒவ்வொரு தகைமையையும் பெற்றுக் கொண்டமைக்கான விபரம் :

5.2 மேலதிக கல்வித்தகைமை : ..........................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

5.3 மேலதிக தொழில் அனுபவம்:...................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

5.4 தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பச் சட்டம் தொடர்பான அறிவு: ..................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

5.5 மொழித்தேர்ச்சி:.......................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

* மேலதிக தகைமைகளை உறுதி செய்கின்ற ஆவணங்கள் விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்படத் தேவையில்லை என்பதுடன், அவ் ஆவணங்களை நேர்முகப் பரீட்சைக்குச் சமர்ப்பிப்பதற்கு தயார்படுத்திக் கொள்ளுதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

6.0 எப்போதாவது எந்தவொரு குற்றச்செயலுக்காகவும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா?
(உரிய கூண்டில் (✓) அடையாளம் இடவும்) (ஆம் எனில் விபரம் தருக)

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

..........................................................................................................................................................

7.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

மேற்படி விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானது எனவும் மற்றும் உண்மையானது எனவும், சகல பகுதிகளும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்டு உள்ளன எனவும், என்னால் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் உண்மையற்றது எனவும் அல்லது பிழையானவை எனவும் நிரூபிக்கப்பட்டால், தெரிவு செய்வதற்கு முன்னராயின்

தகுதியற்றவர் என நிராகரிக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என நான் அறிவேன் எனவும், சகல சட்டவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

...................................... ............................................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

8.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி ................................................................ என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் ................................................................. ஆம் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................... ............................................................................

திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ...........................................................

பதவி: ....................................................................................................

திகதி : ..................................................................................................

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்துக)

9.0 **திணைக்களத் தலைவரின் பரிந்துரை** : (அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம்)

மேற்குறிப்பிட்டவிபரத்திலுள்ள திரு./ திருமதி/ செல்வி ....................................................................... என்பவர் இந்நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் திருத்தமானவை எனவும், அவரது பணி மற்றும் வரவு மகிழ்ச்சிகரமானது எனவும், அவருக்கு எதிராக எவ்வித குற்றங்களும் இல்லை எனவும், இப்பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் உறுதி செய்கின்றேன்.

...............................................................................

திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் : ..................................................................................................

பதவிப் பெயர்: .......................................................................................

முகவரி: ..................................................................................................

திகதி : ..................................................................................................

(பதவி முத்திரையை இடவும்)

10-130

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விண்ணப்பங்கள் கோரல்

## நில அளவைகள் சபை

நிலஅளவைகள் சபையில் பதிவு செய்வதற்காக, செயன்முறை அனுபவத்தினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரல்

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 39 ஆம் பிரிவிற்கு அமைய நில அளவைகள் சபையில் பதிவு செய்வதற்காக தேவையான செயன்முறை அனுபவத்தினை இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அதற்கு அமைய மேற்படி செயன்முறை அனுபவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நபர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நில அளவைகள் சபை தீர்மானித்து உள்ளது.

அதற்கு அமைய மேற்படி நில அளவைகள் சட்டத்தின் 39 ஆம் பிரிவுடன் இணைத்த வாசிக்கப்படவேண்டிய அட்டவணையின் (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்கள், இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர்களாக ஏற்கனவே பயிற்சி பெறும் நபர்கள் இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் தேவைப்பாடு இல்லை.

சகல விண்ணப்பதாரிகளும் www.landsurveycouncil.org எனும் நில அளவைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ள விண்ணப்பத்தின் மூலம் நிகழ்நிலை முறையின் ஊடாக தமது விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி விண்ணப்பத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட வன் பிரதி ஒன்றை 2024.11.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் "செயலாளர், நில அளவைகள் சபை, நில அளவையாளர் நாயக அலுவலகம், இல. 150, பேர்னாட் சொய்ஸா மாவத்தை, கொழும்பு 05" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

டபிள்யூ. சுதத் எல். சி. பெரேரா,
தலைவர்.

நில அளவையாளர் சபை,
இல. 150, நில அளவையாளர் அலுவலகம்,
பேர்னாட் சொய்ஸா மாவத்தை,
கொழும்பு 05,
2024, ஒற்றோபர் 10.

10-157

---

## இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர்கள் தொழில்நுட்பம் அல்லாத - வகை 2 சேவைப் பிரிவில் பரீட்சை தரவு உதவியாளர் (திணைக்களம் சார்ந்து) தரம் III க்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2024

இலங்கைப் பரீட்சைகள் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத வகை 2 சேவைப் பிரிவில் பரீட்சை தரவு உதவியாளர் (திணைக்களம் சார்ந்த) - தரம் III பதவிக்கு தற்போதுள்ள 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறந்த அடிப்படையில் போட்டி ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**குறிப்பு** - பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால்"அரச சேவை ஆட்சேர்ப்பு செயல்முறையினை மதிப்பாய்வு செய்தல்" என்பதன் கீழ் வெளியிடப்பட்ட இலக்கம் MPS/HRD/HR03Recru. Process/2022/06 மற்றும் 03.01.2023 திகதியிட்ட கடித மூலம் ஆட்சேர்ப்புக்கு அனுமதி கிடைத்துள்ளது.

01. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை கல்வித் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்பதோடு விண்ணப்பங்களை 21 ஒற்றோபர் 2024 அன்று 09.00 மணி முதல் 19 நவெம்பர் 2024 21.00 மணி வரை அனுப்ப முடியும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியது நிகழ்நிலை (Online) வழியாக மட்டுமே என்பதோடு ஏனைய வழிகளில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1.1 தற்போது அரச/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் பிரதியை தமது பிரத்தியேக கோப்பில் உள்ளிட நிறுவனத் தலைவரிடம் கையளிக்க வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் போது நிறுவன தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.2 இந்த பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத் தினால் வரையப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு 2025 சனவரியில் கொழும்பில் மட்டுமே நடத்தப்படும். இந்த பரீட்சையை ஒத்தி வைக்க அல்லது இரத்துச் செய்ய பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அதிகாரம் உள்ளது.

02. **தகுதி**:

2.1 **கல்வித் தகுதி**

I. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. கல்விப் பொதுத்தராதர சான்றிதழ் (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலாவது (பொது சாதாரணபரீட்சை மற்றும் பொது ஆங்கிலப் பாடம் தவிர) சித்தி பெற்றிருக்க வேண்டும்.

2.2 **தொழில்முறை தகுதிகள்**

குறைந்த பட்சம் கணினி / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தொடர்பான தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் 3 அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான வேறு தகுதியை பெற்றிருத்தல்.

2.3 **அனுபவம்**

கணினி தரவு உள்ளீடு செயற்பாடு தொடர்பான 06 மாத அனுபவம்

2.4 உடல் தகுதிகள்

பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கு சிறந்த உடல் மற்றும் உளத் தகுதிகளுடன் கூடியதோடு சேவையின் தேவைக்கேற்ப இரவு பகல் வேலை செய்யும் இயலுமையையும் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2.5 **ஏனைய தகுதிகள்**

I. இலங்கையின் பிரசையாக இருத்தல்;
II. சிறந்த நடத்தை கொண்டவராக இருத்தல்;
III. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதிக்குள் (19.11.2024) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
IV. எந்த ஒரு மதத்தையும் சார்ந்த மதகுருவாக இருக்கும் எந்த ஒரு நபருக்கும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவோ அல்லது தோற்றவோ அனுமதிக்கப்படுவதில்லை.

2.6 **வயதெல்லை**

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதியன்று வயது 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(அதன்படி பிறந்த திகதி 19.11.2006 அல்லது அதற்கு முன் மற்றும் 19.11.1989 அல்லது அதற்குப் பின் பிறந்தவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.)

03. **மொழிமூலம்** : இந்த பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மட்டுமே நடத்தப்படும். தாம் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.மேலும் தாம் நியமனம் பெறுதற்கு தகுதி பெறும் மொழிமூலமானது, தம்மால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலமாகும்.

04. **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துப் பரீட்சை, கட்டமைக்கப் பட்ட நேர் முகப்பரீட்சை மற்றும் செய்முறை பரீட்சை ஆகியவற்றில் விண்ணப்பதாரிகள் பெறும் மொத்த புள்ளி திறமை ஒழுங்கு வரிசைக்கேற்ப நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படு வார்கள்.

4.1 **எழுத்துப் பரீட்சை**

| பாடம் | நேரம் | அதிகபட்ச புள்ளி | சித்தி பெறும் புள்ளி |
|---|---|---|---|
| 1. கணினி கல்வியறிவு | 2 மணிநேரம் | 100 | 40% |

**பாடத்திட்டம்**:

1. கணினி கல்வியறிவு – கணினிகள் / தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் 3 இன் பாடத்துறையுடன் தொடர்புடைய அறிவை ஆராயும் வினாப்பத்திரம்.

**குறிப்பு** – எழுத்துப் பரீட்சைத் தாளில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் பரீட்சைச் சுட்டெண் / அகராதி ஒழுங்குமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் அதிக புள்ளி பெற்ற விண்ணப்பதாரர்களிடையே உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட இருமடங்கினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

*4.2* **கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை:**

இதன்போது விண்ணப்பதாரியின் கல்வித் தகுதி, தொழில்முறை தகுதி, அனுபவம் மற்றும் செய்முறைத் திறன் ஆகியவை சோதிக்கப்படும்.

| *புள்ளி வழங்கப்படும் முக்கிய தலைப்பு* | *அதிக பட்ச புள்ளி* | *தெரிவுக்கு கவனத்திற் கொள்ளும் குறைந்தபட்ச புள்ளி* |
|---|---|---|
| I. மேலதிக கல்வித் தகுதி | 30 | பொருந்தாது. |
| II. மேலதிக தொழில்முறை தகுதி | 35 | |
| III. நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை | 05 | |
| மொத்தம் | 70 | |

**குறிப்பு** - மேலே அட்டவணையில் காட்டப் பட்டுள்ள புள்ளி வழங்கும் முக்கிய பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச புள்ளிகளுக்குள் ஒவ்வொரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கும் விரிவான புள்ளித் திட்டத்துக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அளிக்கப்படும்.

*4.3* **செய்முறை பரீட்சை**

| *பரீட்சிப்புக்கு உள்ளாகும் செயற்பாடு* | *வழங்கப்படும் அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|
| தரப்பட்ட ஆவணத்தின் விதமாகவே உரியதான அச்சிடப்பட்ட பிரதியைப் பெறுதல் | 10 |
| தட்டச்சு செய்தலுக்கும் உரிய கடின பிரதியை பெறுவதற்கான நேரம் | 10 |
| அதன் பிழையற்ற எழுத்து நடைக்காக | 10 |
| மொத்தம் | 30 |

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களின் தட்டச்சுத் திறனைச் சோதிக்கும் செய்முறை பரீட்சிப்பு நடத்தப்படும். அதன்போது, கொடுக்கப்பட்ட பல பந்திகள் கொண்ட ஆவணம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் கணினியால் தட்டச்சு செய்யப்பட்டு அதன் அச்சிடப்பட்ட பிரதியை பெற்றுக் கொடுக்கப்படல் பரீட்சிக்கப்படும்.

*4.4* எழுத்துப் பரீட்சை, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறை பரீட்சிப்பு ஆகியவற்றில் பெற்ற மொத்த புள்ளிகளின் திறமைஒழுங்கு வரிசையின் அடிப்படையில், நிலவும் வெற்றிடங் களின் எண்ணிக்கைக்கு உரியதாக பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

05. சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவையின் நிபந்தனைகள்

I. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் சகிதமானது. தங்களுக்குத் தகுதியான ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அரசாங் கத்தின் எதிர்கால கொள்கை முடிவுகளுக்கு நீங்கள் உட்பட்டு இருக்க வேண்டும். விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்பு நிதியை செலுத்த வேண்டும்.

II. இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் சோதனைக் காலத்திற்கு உட்பட்டது. பதவியில் சேர்ந்த 03 ஆண்டுகளுக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி I வது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட் சையில் சித்தி பெற வேண்டும். அந்த கால கட்டத்தில், சேவை, வரவு, நடத்தை ஆகியவை திருப்திகரமான மட்டத்துக்கு மேல் இருத்தல் மற்றும் தொடர்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பு தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால், நியமிக்கப்பட்ட பதவி உறுதி செய்யப்படும்.

III. 16.10.2020 திகதியிட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப் பட்டுள்ள விதிகள் மற்றும் அது தொடர்பான சுற்றறிக்கைகளின் விதிகளின்படி, இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவதற்கு முன்பதாக சேவைக்கு ஆட் சேர்க்கப்பட்ட மொழிமூலத்துக்கு மேலதிகமாக பிறிதொரு அரசகரும மொழியிலும் உரிய தேர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டும்.

IV. இந்த பதவியானது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கே மட்டுப்படுத்தப்பட்ட சேவையாகும். இருப்பினும், அவர்கள் திணைக்களத்திற்குள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்ற நியமிக்கப்படலாம். சேவைத் தேவையைப் பொறுத்து பகல் மற்றும் இரவு வேலை ஒழுங்குஇருப்பதால், அந்த நியமனத்தை ஏற்று அதன்படி செயற்படுவது கட்டாயமாகும்.

V. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், தாபனக் கோவை விதிகள், நிதிப் பிரமாணங்கள், திணைக்கள ஆணைகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் பிற

விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

06. **பெறுபேறுகளை வெளியீடு செய்தல்**

பரீட்சைக்கு தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் அறிக்கையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் தபால் மூலமாகவோ அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும்.

07. **வேதன திட்டம் (மாதாந்தம்)** : அரச நிர்வாக சுற்றறிக்கை 3/2016 MN-01-2016 இன் கீழ் ரூ. 27,140 - 10× 300 - 11× 350 - 10× 495 - 10× 660 - ரூபா 45540.

08. **பதவி உயர்வு நடைமுறை :**

இலங்கை பரீட்சைகள் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - வகை 2 சேவை பிரிவில் பரீட்சை தரவு உதவியாளர் (திணைக்களம் சார்ந்த) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை பொருந்தும்.

09. **விண்ணப்பிக்கும் முறை :**

I. விண்ணப்பங்கள் நிகழ்நிலை வழியாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். நிகழ்நிலை வழியே விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை / ஏற்றுக்கொள்ளப்படாமை தமது தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி (SMS) வாயிலாக அறியத்தரப்படும். நிகழ்நிலையில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்,பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பொது அறிவுறுத்தல்களை (Common Instructions) தரவிறக்கவும் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது இந்த அறிவுறுத்தல்களை கவனமாக பின்பற்றவும். விண்ணப்பத்தின் கடின பிரதியை பின்னர் விசாரிப்புகளுக்கு தம்வசம் வைத்திருக்க வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு நிகழ்நிலை முறைமையிலுள்ள தகவல்கள் சரியானதாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பூரணமற்ற விண்ணப் பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பதாரரினால் பரீட்சைக் கட்டணமாக ரூ.600 செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது,நிகழ்நிலை முறையில் வழங்கப்படும் பின்வரும் கட்டண முறையின் கீழ் மட்டுமே கட்டணம் செலுத்த வேண்டும்.

(I) எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card)

(II) இணையத்தில் பணம் செலுத்தும் வசதியுடன் கூடிய வங்கி பற்றுஅட்டை (Bank Debit Card with Internet Payment Facility)

(III) இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி பில் செலுத்தும் முறை (Bank of Ceylon Online Banking Bill Payment Method)

(IV) இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையினாலும் (Bank of Ceylon any Branch)

குறிப்பு : மேற்கூறிய முறைகள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளும் விதம் குறித்த அறிவுறுத்தல் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையதளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

III. கட்டணக் கொடுப்பனவு கிடைத்தமை குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிக மாகவோ செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.மேற்கூறிய கட்டண முறைகள் மூலம் பரீட்சை கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் பிழைகளுக்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

IV. எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கு செலுத்தப் பட்ட கட்டணம் திருப்பி அளிக்கப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றப்பட மாட்டாது.

V. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிட்டட தகைமைகள் கொண்டவர்களே விண்ணப்பித் துள்ளார்கள் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசித் திகதி அல்லது அதற்கு முன்னதாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பங்களை நிகழ்நிலை வழியாக சரியாகச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை வழி பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படுவதோடு, விண்ணப் பதாரருக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம்

அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தான் அனுமதி அட்டை பெறாத பரீட்சார்த்தியாயின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது குறித்து பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையில் விசாரிக்கவேண்டும்.அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராக இருந்தால், அந்த விபரங்களோடு தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவாக பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தை குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதத்தை, அறிவித்தலில் காட்டியிருந்த தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சை திணைக்களத்தால் கோரப்படும் யாதும் தகவலை உறுதி செய்வதற்காக தம்மிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

VI. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்குவதால், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கு தகுதிகளை பூர்த்தி செய்ததாக கருதப்படக் கூடாது.

VII. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையுமாறு தங்கள் அடையாளத்தை எழுத்துப் பரீட்சையின் போதும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போதும் பரீட்சார்த்தியின் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிசெய்யும் வண்ணம் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காமல் இலத்திரனியல் தொழிநுட்ப உபகரணங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய வேண்டும். தங்கள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் பரீட்சார்த்திகளை அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காமலிருக்க வேண்டும்.

10. பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகளுக்கு பரீட்சைக்கான பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். அந்த விதிகளை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டியிருக்கும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த,
பத்தரமுல்ல,
2024, ஒற்றோபர் 18.

10-173

---

**சுற்றாடல், வனசீவராசிகள், வனவளங்கள், நீர்வழங்கல், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - அத்துருகிரிய**

2024/2025 கல்வியாண்டுக்கான மாணவர்களை சேர்த்துக்கொள்ளுதல்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மற்றும் இலங்கையில் பெருந்தோட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் ஈடுபட ஆர்வமுள்ளவர்களினது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உயர்த்தும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரேயொரு அரசாங்க நிறுவனமாகும்.

2024/ 2025 கல்வியாண்டுக்கான கீழ்க்கண்ட படிப்புக்கு உயர் தரத்தில் சித்தி பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## 01. INDUCTION PROGRAMME IN PLANTATION MANAGEMENT & TECHNOLOGY (IPPMT) - PLANTER TRAINEE PROGRAMME *(உதவி தோட்ட கண்காணிப்பாளர் பயிற்சி வகுப்பு)*

| | | |
|---|---|---|
| காலம் | - | ஒரு வருடம் (01) |
| முதலாம் கட்டம் | - | 06 மாத முழு நேரப் படிப்பு |
| இரண்டாம் கட்டம் | - | தோட்டத்தில் 06 மாதங்கள் நடைமுறைப் பயிற்சி |
| மொழி மூலம் | - | ஆங்கிலம் |
| பாடக் கட்டணம் | - | முதல் கட்டம் ரூபா 450,000.00 (தங்குமிட வசதிகளுடன்) |
| வயதெல்லை | - | அதிகபட்ச வயது எல்லை 22 ஆண்டுகள் |

**கற்கைநெறிக்கான தகுதிகள்**.- க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் இரண்டு முறைக்கு மீறாமல் சித்தியடைந்து ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களிலும் திறமை சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாட பிரிவில் இருந்து மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விவசாயம் சார்ந்த டிப்ளோமா படிப்பை முடித்திருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை :**

இந்தப் படிப்புகளுக்கான முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஒற்றோபர் 30 அன்று அல்லது அதற்கு முன் தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியுடன், "இயக்குநர்/ GEO, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், M. D. H. ஜெயவர்தன மாவத்தை, அதுருகிரிய, இலங்கை" என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். மற்றும் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அல்லது www.nipm.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக நிகழ் நிலையில் (Online) சமர்ப்பிக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு :**

011-2770232
074-0801966

FM/TR/03

# NATIONAL INSTITUTE OF PLANTATION MANAGEMENT

## APPLICATION FOR ADMISSION

**Name of the Programme** :

**Name in Full : Mr. / Mrs. / Miss. / Dr. / Prof. ( Use BLOCK LETTERS)**

**Name with initials** :

**Permanent address** :

**Employer** :

**Designation :**

**Tele. No.** :

**Mobile No.** :

**Official address** :

**E-mail** :

**National Identity card No.**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Tele. No.** :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Marital status** :

Single ☐
Married ☐

**Date of birth** :

| Date | | Month | | Year | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**Fax No.** :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

## EDUCATIONAL QUALIFICATIONS

### G.C.E (O/L) Examination

| Subject | Grade | Year |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

### G.C.E (A/L) Examination

| Subject | Grade | Year |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

### COURSE COMPLETED AT THE NIPM

| Course | Year |
|---|---|
| | |
| | |
| | |

## PROFESSIONAL QUALIFICATIONS

| Institute | Period | Qualification | Year |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## WORK EXPERIENCE

| Organization | Period | Designation | Year |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**FINANCE**

How will you finance your professional studies at the institute?

Self ☐ Sponsored ☐

If sponsored, by whom ?

.................................................. ..................................................

Date Signature of the Sponsor

I hereby certify that the particulars furnished by me in this application are true & accurate and agree to abide by the rules and regulations governing the above course.

.................................................. ..................................................

Date Signature of the Applicant

**Payments Procedure for the programmes**

Payments can be made to the credit of NIPM Current Account No. 3697566 maintain at any branch of Bank of Ceylon ( BOC) and the printed "Customer Deposit Slip" should be forwarded to NIPM, Athurugiriya in order to obtain official receipt for payment. ( Name to be written in bank deposit slip for identification of the payee)

*10-174*

---

**திருத்தம்**

**கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு**

இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான I வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2024
(இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)

மேற்படி தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024.09.13 ஆந் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பந்தி இலக்கம் 05 இல் இறுதி வாக்கியமான "வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதிக்கு பின்னர் வரும் திங்கட் கிழமையன்று நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பணிகள் ஆரம்பிக்கும்" எனும் பகுதி இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன், பந்தி இலக்கம், 07 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியானது 2024, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வரையில் நீடிக்கப்படுகின்றது.

02. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் அவ்வாறே வலுவில் இருக்கும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு.

கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு,
இசுருபாய, பெலவத்த,
பத்தரமுல்ல,
2024, ஒற்றோபர் 16.

*10-196/1*

## திருத்தம்

## கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு

இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான II வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2024
(இலங்கை அதிபர் சேவையின் தரம் 2 உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் தரம் II நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)

மேற்படி தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024.09.13 ஆந் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பந்தி இலக்கம் 05 இல் இறுதி வாக்கியமான “வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதிக்கு பின்னர் வரும் திங்கட் கிழமையன்று நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பணிகள் ஆரம்பிக்கும்” எனும் பகுதி இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன், பந்தி இலக்கம், 07 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியானது 2024, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வரையில் நீடிக்கப்படுகின்றது.

02. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் அவ்வாறே வலுவில் இருக்கும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு.

கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு,
இசுருபாய, பெலவத்த,
பத்தரமுல்ல,
2024, ஒற்றோபர் 16.

10-196/2